Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 20-4-1946 சித்திரைமீ 8உ { மலர் 28

## மாணவர் பயிற்சி

15-4-46ல் ஈரோடு வெங்கட்டநாயக்கர் சத்திரத்தில் ஏற்கனவே அறிவித்தபடி மாணவர் பிரச்சார பயிற்சிக்கூடம் தொடங்கியது. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் 50 மாணவர்கள் வரை வந்து பயிற்சி பெறுகின்றனர். காலை மாலை இரு வேளையும் பெரியார் அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சி தருகிறார்.

25-4-46ல் இவர்களுக்குப் பயிற்சி முடிவுபெறும். கூட்டங்கள் நடத்த ஏற்பாடுசெய்து அழைப்பு அனுப்பியுள்ள இடங்களுக்கு 25ம் தேதியிலிருந்து மாணவர்கள் செல்கிறார்கள். பிற இடங்களுக்கு அழைப்பு கிடைத்தவுடன் செல்வார்கள்.

முன்னர் அழைப்பு அனுப்பப்படாத மாணவர்கள் சிலருக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. இவர்களுக்கு 26-4-46 முதல் பயிற்சி நடைபெறும்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

---

## கரூர் தாலுக்கா 2வது மருத்துவர் மாநாடு

23-4-46 செவ்வாய்கிழமை காலை 9மணிக்கு கரூர் கோட்டைமேடு ஹைஸ்கூல் பந்தாடும் மைதானத்தில் டாக்டர் தருமலிங்கம் பந்தலில் திராவிடநாட்டின் தனிப்பெரும் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும். சென்னை தோழர் க. அன்பழகன் அவர்கள் மருத்துவக்கொடி உயர்த்தி வைப்பார்கள். கும்பகோணம் டாக்டர் ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைப்பார்கள். அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு வரவேண்டுகிறோம்.

வரவேற்புக்கழக தலைவர்:
எஸ். ஸ்வர்ணபுரி.
செயலாளர்கள்: D. நடராசன்,
எம். மருதமுத்து.

## மாவட்ட அமைப்பாளர்களுக்கு

மாணவர் பிரச்சார கூட்டங்களை அமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டங்கள் நடைபெறவேண்டிய ஊர், தேதி முதலிய விவரங்களையும், எத்தனை மாணவர்கள், எவ்வளவு நாட்களுக்கு தேவை என்பதையும் உடனே தெரிவிக்க வேண்டுகிறேன். மாணவர்கள் 25-4-46 தேதிக்குமேல் அவரவர்கள் ஊருக்குச் சென்றுவிடுவார்களாதலால் அதற்குள் அன்புகூர்ந்து தெரிவிக்கக்கோருகிறேன். அதற்குப்பின் வரும் அழைப்புகளுக்கு அவரவர்கள் ஊரிலிருந்துதான் அனுப்ப வேண்டி நேரிடும். மாணவர்களை இங்கிருந்து அனுப்பிவைப்பது சௌகரியமாகையால் கூட்ட ஏற்பாடுகளை உடனே தெரிவிக்கக் கோருகிறேன்.

இயக்கத் தோழர்களும் ஆங்காங்கு கூட்டங்களுக்கு ஏற்பாடுசெய்து மாவட்ட அமைப்பாளர்களுக்கும் இங்கும் தெரிவிக்கக்கோருகிறேன்.

★

## சேர்ந்தீர்களா?

திராவிடர் கழகத்தில் 1946ம் ஆண்டிற்கு அங்கத்தினராய்ச் சேர்ந்துவிட்டீர்களா? இல்லையேல் இன்றே இப்பொழுதே சேருங்கள்.

4 கோடி திராவிட மக்களும் திராவிடர் கழகத்தில்தான் என்பதை உறுதிப்படுத்துங்கள்.

உங்கள் பகுதியிலும், ஊரிலும், வட்டத்திலும் உள்ள எல்லோரை[illegible] சேர்த்து கிராம கழகங்கள[illegible] [illegible]க்கா கழகங்களையும் கழகம் இல்லாத ஊர்களில் உடனே ஏற்படுத்துங்கள்.

உழைப்பாளிகளைப் பார்த்து தலைவர், செயலாளர், அமைப்பாளர் போன்ற உத்தியோகப் பொறுப்பை அளியுங்கள். திராவிடர் கழகம் ஏழைகளுக்குப் பாடுபடுவது; ஏழைகளுக்குச் சொந்தமானது; ஏழைகளின் பாதுகாப்பு ஸ்தாபனம். ஏழைமக்களே அதனை நிர்வகிக்கவேண்டும். இளைஞர்கள் நன்கு உழைக்கக் கூடும். உழைக்கவேண்டும். தன்னலம் மறந்த உழைப்பு தேவை, மிகமிகத் தேவை. இதற்கு வாலிபர்கள் மிகத் தகுதியானவர்கள், வாலிபர்களே இன்றே பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள்.

வருங்காலம் பெருஞ் சோதனைக் காலம். உங்களால்தான் வெற்றிபெற முடியும். உடனே அங்கத்தினர்களை ஒரு லட்சமாக்குங்கள், கழகம் அமையுங்கள். கடமையைச் செய்யுங்கள்.

★

## திராவிடர் கழகங்களுக்கு

சென்ற ஆண்டில் சுமார் 300 திராவிடர் கழகங்கள் தமிழ் ஜில்லாக்களில் அமைக்கப்பட்டவை. இவ்வாண்டிற்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்த செய்தி சில கழகங்களிலிருந்தே வந்துள்ளது. பிற கழகங்கள் என்னசெய்கின்றன? நிர்வாகஸ்தர்கள் உண்டா, இல்லையா? என்ன செய்கிறார்கள்? என்பதே தெரியவில்லை. —வாரந்தோறும் அறிக்கைவிட்டு குடி அரசில் உள்ள கொஞ்சம் இடத்தையும் வீணாக்குவதாகவே உள்ளது. இது சரியல்ல. உடனே கழக உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டுங்கள். இவ்வாண்டிற்கு (1946) நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து செய்தியனுப்புங்கள். இம்மாதத்திற்குள் கழகங்களின் மொத்த எண்ணிக்கையும் ஒவ்வொன்றின் நிர்வாகஸ்தர்கள் பெயர்களும் தெரிந்தாகவேண்டும். அன்புகூர்ந்து உடனே செய்துமுடியுங்கள்.

செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

---

19-3-46ல் மீன் பிடிப்போர் சங்கச் சார்பில் திருவல்லிக்கேணி கடற்கரையில் தோழர் என். சிவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிங்காரவேலு மரண அனுதாபக் கூட்டத்தில் பல கட்சித் தோழர்கள் சொற்பொழிவாற்றி அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. திருவல்லிக்கேணி கடற்கரையிலுள்ள மெரினா ரீடிங்ரூம் என்பதை சிங்காரவேலு ரீடிங்ரூம் என்று மாற்றவேண்டுமென்றும், தோழர் சிங்காரவேலு அவர்களுடைய சிலை நாட்டவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

# மாணவர் சுற்றுப்பிரயாணம்

★

## தஞ்சை மாவட்டம்

புலவர் ஆறுமுகம், புலவர் குழந்தையா, ஈரோடு சுப்பையன், தில்லை வில்லாளன் ஆகியோர்.

25-4-46 பூதலூர்
26— பொம்பூர்
27— திருவையாறு
28— தஞ்சை
29— சாந்தை
30— ஐயம்பேட்டை
1-5-46 தாராசுரம்
2— திருச்சிறை
3— குடவாசல்
4— நாச்சியார்கோவில்
5— சாக்கோட்டை
6— ஓய்வு
7— செம்பனார்கோவில்
8, 9, 10-மாயவரம் வட்டம்

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன்.

வி. எஸ். பி. யாகூப்,
விசயபுரம் போஸ்டு, திருவாரூர்.

★

## சென்னை—செங்கற்பட்டு

29-4-46 முதல் 9-5-46 வரை சென்னை நகர்.

12-5-46 முதல் 16-5-46 வரை செங்கற்பட்டு மாவட்டம்.

விவரம் பின்னர். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். வி. நடராசன்,
18, பெருமாள் முதலி தெரு,
பெத்துநாய்க்கன்பேட், சென்னை.

★

## வடஆற்காடு மாவட்டம்

28-4-46 திருப்பத்தூர்
29— ஜோலார்பேட்டை
30— நாட்டறம்பள்ளி
1-5-46 வாணியம்பாடி
2— குடியாத்தம்
3— வேலூர்
4— செய்யாறு
5— ஆரணி

மற்றவை பின்னர் அறிவிக்கப்படும். விவரங்களுக்கு வடஆற்காடு மாவட்ட அமைப்பாளர் தோழர் வி. எம். இராச மாணிக்கம், வியாபாரம், திருப்பத்தூர் வடஆற்காடு; என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

★

## கோவை மாவட்டம்

25-4-46 ஈரோடு அக்கிரகாரம்
27— ஜம்பை
28— கோபி
29— சத்தி
30— அவனாசி
1-5-46 கூனூர்
2— இருகூர்
3— சிங்காநல்லூர்
4— குனியமுத்தூர்
5— கோவை
6— கோவை சுக்கிரவாரப் பேட்டை
7— பாப்பநாய்க்கன்பாளையம்
8— செல்வபுரம்
9— புளியகுளம்

மற்றவை பின்னர். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். இ. பாலகுரு,
பட்டக்காரர் பங்களா, ஈரோடு.

★

## திருநெல்வேலி மாவட்டம்

26-4-46 முதல் மாணவர்கள் சுற்றுப் பயணம் தூத்துக்குடியிலிருந்து தொடங்கும். கூட்டங்கள் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

கே. வி. கே. சாமி,
62, விக்டோரியா ரோடு, தூத்துக்குடி.

★

## மதுரை மாவட்டம்

26-4-46 முதல் மதுரையிலிருந்து தொடங்கும். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

சி. முத்திருளாண்டி,
55 D புட்டுத்தோப்புரோடு, மதுரை.

---

# தீ மிதித்தலுக்கு அம்மை அருள் வேண்டாம்

12-4-46ல் விழுப்புரம் கீழ்ப்பெரும்பாக்கத்தில் நடந்த திரௌபதையம்மன் கோவில் நெருப்புத் திருவிழாவில், கீழ்ப் பெரும்பாக்கம் திராவிடர் கழக அங்கத்தினர்களான தோழர்கள் நாராயணசாமி பாலகிருஷ்ணன், கண்ணன், தேவநாதன், செல்லப்பன், சவுரி, ராமச்சந்திரன், அருணாசலம் (கறுப்புடையுடன்), ஆறுமுகம், ரத்னவேலு ஆகிய 10 பேர்களும் 'மடமை ஒழிக' 'குருட்டு நம்பிக்கை ஒழிக' என்னும் கோஷங்களுடன் தீக் குழியில் மூன்று தடவை இறங்கி வந்தார்கள்.

# தோழர் சாரங்கபாணி அவர்களுக்கு வரவேற்பு

சிங்கப்பூர் 'தமிழ் முரசு' ஆசிரியர் தோழர் சாரங்கபாணி, அவர்கள் திருவாரூருக்கு 5-4-46ல் வந்தபொழுது திராவிடர் கழகத் தோழர்கள் பலர் ரயில்வே நிலையத்திற்குச்சென்று கறுப்புமாலை அணிவித்து தோழர் சாரங்கபாணி அவர்களைச் சிறப்பாக வரவேற்றார்கள்.

# வேண்டுகோள்

★

## சென்னைத் தோழர்களே!

திராவிடர் கழக உறுப்பினர் இரசீதுகள் பெற்றுள்ள அனைவரும் சேர்த்துள்ள இரசீதுகளுடன், கட்டணமும் சேர்த்து உடனடியாக கொண்டுவந்து கொடுக்குமாறு மிகமிக வேண்டிக்கொள்கிறேன். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் உறுப்பினர் சேர்க்கும் வேலையைப் பூர்த்திசெய்துவிட வேண்டுமாதலால் உடனே சேர்த்த இரசீதுகளை தயவுசெய்து கொண்டுவந்து கொடுக்கவும். என்.வி.என். பொதுக்காரியதரிசி.

o o

## நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு

நெல்லை மாவட்ட சம்பந்தமான அங்கத்தினர் பதிவுசெய்த புத்தகங்களும், தொகையும் மற்றும் கடிதம் எழுதுபவர்களும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். கே. வி. கே. சாமி,
62, வி. ரோடு, தூத்துக்குடி.

o o

## கரூர் கறுப்புச்சட்டைப் படையினருக்கு,

நமது தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 23-4-46 செவ்வாய்க்கிழமையன்று கரூர் தாலூக்கா மருத்துவர் மாநாட்டிற்கு வருகிறபடியால் க. ச. படையினர் அனைவரும் கறுப்புச்சட்டை யணிந்து இரயிலடிக்கு வந்து பெரியார் அவர்களை வரவேற்க வேண்டுகிறோம்.

எம். கே. கரிகாலன்,
வி. கே. புலிகேசி.

o o

## வடஆற்காடு ஆரணி தோழர்களுக்கு

ஆரணி தாலுக்காவிலும் டவுனிலும் திராவிடர் கழகத்தில் சேருவோர் தோழர் சி. ஜயராமன், மார்க்கட் ரோட், ஆரணி. என்ற முகவரியில் சேரலாம். இரசீது புத்தகம் வேண்டுவோர் பி. என். இராமகிருஷ்ணன், செயலாளர், திராவிடர் கழகம், ஆரணி. என்ற முகவரிக்கு எழுதுக.

o o

## மாணவர் கழக உறுப்பினர்களுக்கு

மாகாண திராவிட மாணவர் கழக நிர்வாக உறுப்பினர்கள் (பொதுக்குழு) தங்கள் தற்போதைய முகவரிகளையும், நிலையான முகவரிகளையும் ஈரோட்டிற்கு உடனே தெரியப்படுத்தவும்.

இரா. இளம்வழுதி, செயலாளர்.

## திருத்தம்

18-4-46 குடி அரசு 2வது பக்கம் 3வது கலத்தில் கொரடாச்சேரியில் கழகம் அமைத்திருக்கிறார்கள் என்றிருப்பதை கொரடாச்சேரிக்கடுத்த அத்திக்கடையில் என்று வாசிக்கவும். (ஆ-ர்

ரோஜா முத்தையா

# நடக்க இருப்பவை

● 22-4-46 திங்கள் இரவு 9-30 மணிக்கு குடந்தை ராஜா டாக்கீசில் திராவிட மாணவர் கழக நிதிக்காக தோழர் வி. பி. என். பாபு அவர்கள் தலைமையில் இராமாயணத்தீர்ப்பு என்னும் நாடகம் நடைபெறும்.

● 22-4-46ல் செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி தாலுக்கா காட்டூர் ஆதிதிராவிட சங்க ஆண்டுவிழா பம்பாய் ஆ. தி. சங்கத் தலைவர் பி. பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

● 28-4-46 ஞாயிறு பிற்பகல் 3-30 மணிக்கு சாக்கோட்டை பெரியார் பார்க்கில் மேற்படியூர் சுயமரியாதை சமதர்ம சங்க 12வது ஆண்டுவிழா குடந்தை தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

● 22-4-46 திங்கட்கிழமை மாலை 6½ மணிக்கு கவுன்சிலர் திரவியம் அவர்கள் தலைமையில் வாசுநேரி குழியித் தெரு ஸ்வக்கம்வீரர் இளைஞர் மன்றத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் டி. பி. வேதாசலம், டி. கே. சீனிவாசன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

● 21-4-46 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு சென்னை பிராட்வே லோன்ஸ்குயர் ஸ்ரீராமுலு நாயுடு பார்க்கில் 12வது வட்டம் திராவிடர் கழகத் திறப்புவிழா நடைபெறும். தலைவர்: காஞ்சிமணிமொழியார். திறப்பாளர்: என். வி. நடராசன். கொடியேற்றல்: என். ஜீவரத்தினம். பெரியார் படத்திறப்பு: C. D. T. அரசு. சொற்பொழிவாளர்: மணி இளங்கோ, கே. கோவிந்தசாமி, என். எம். சுப்ரமணியம், பி. எம். துரையரங்கனார் மற்றும் பலர்.

---

## மன்னார்குடி திராவிடர் கழக முதலாண்டுவிழா

சிங்கப்பூர் "தமிழ் முரசு" பத்திரிகை ஆசிரியர் தோழர் சாரங்கபாணி அவர்கள் தலைமையில் 28-4-46 ஞாயிறன்று நடைபெறும். அதுபோது தோழர்கள் டி. பி. வேதாசலம், அன்பழகன், அரசங்கண்ணனார் மற்றும் பலர் கலந்து கொள்வார்கள்.

வெளியூர் தோழர்கள் அனைவரும் கறுப்புச்சட்டை அணிந்து வருமாறு வேண்டுகிறேன்.

ப. நாராயணசாமி,
செயலாளர், திராவிடர் கழகம்.

---

## கறுப்புச் சட்டைப்படை முதலாவது மாகாண மாநாடு மதுரை

மே மாதம் 11, 12 தேதிகளில் வைகையாற்றில் அமைக்கப்பட்டிருக்கும் தியாகராய நகர், நாகம்மையார் பந்தலில் நடைபெறும்.

தலைவர்;-
பெரியார் ஈ. வெ. ராமசாமி
திறப்பாளர்:-
தளபதி சி. என். அண்ணாதுரை
கொடி உயர்த்துபவர்:- பழயகோட்டை இளய பட்டக்காரர் என். அர்ச்சுனன்
தாலமுத்து-நடராஜன் படத்திறப்பாளர்:
இரா. நெடுஞ்செழியன்
வரவேற்புக்குழு ரூ. 3. பிரதிநிதி ரூ. 1.

முதல்நாள் எம். ஆர். ராதா கம்பெனியின் "போர்வாள்" நாடகத்திற்கு ஏற்பாடாகிறது.

இரண்டாம்நாள் தாராசுரம் திராவிட நடிகர் கழகத்தாரின் "இராமாயணத் தீர்ப்பு" எனும் நாடகம் நடக்கும்.

## சென்னை சர்க்கிள் மாநாடுகள்

வடசென்னை (1வது சர்க்கிள் திராவிட மாநாடு) 28-4-46 ஞாயிறு.

தியாகராயநகர்- நுங்கம்பாக்கம் திராவிடர் மாநாடு 5-5-46 ஞாயிறு.

மேற்கு சென்னை (4வது சர்க்கிள் திராவிடர் மாநாடு) 26-5-46 ஞாயிறு.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

11-4-46ல் பாளையங்கோட்டை தோழர் ஆறுமுகம்—முத்தம்மாள் இவர்களின் வாழ்க்கை ஒப்பந்தம் நெல்லை திராவிடர் கழகத் தலைவர் எ. வி. முத்தையா அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் நடைபெற்றது. குடிஅரசுக்கு ரூ. 1. நன்கொடை அளிக்கப்பட்டது.

ㅇ ㅇ

7-4-46ல் போளத்தில் தோழர் இரத்தினம்—செல்வமணி அம்மையார் இவர்களின் வாழ்க்கையொப்பந்தம் நன்னிலம் சப்ரிஜிஸ்ட்ரார் தோழர் சி. சப்பையா தலைமையில் நடைபெற்றது. இயக்கத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். தோழர் என். மகாதேவன் அவர்கள் திருமண நிகழ்ச்சிக்காக பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். குடிஅரசு வளர்ச்சிக்காக ரூபா ஒன்று அளிக்கப்பட்டது.

0 0

25-3-46ல் திருச்சி வாசுனேரி மேட்டுத்தெரு டாக்டர் க. பிச்சைமுத்து சித்தவைத்தியசாலையில் தோழர் மருதமுத்து—ராமாயி அம்மாள் வாழ்க்கையொப்பந்தம் நடைபெற்று பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

---

## செல்லம்—ராஜு வாழ்க்கை ஒப்பந்தம்

19-4-46 வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு ஈரோடு சரஸ்வதி ஹாலில் திராவிடர் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் பெரியாரின் முன்னவர் வைத்தியவள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களது இரண்டாவது மகள் செல்லம் என்கிற நாகலட்சுமி, சேலம் தாதம்பட்டி மணியம் எம். மல்லநாயக்கர் மகன் எம். ராசு ஆகிய இருவருக்கும் வாழ்க்கையொப்பந்தம் இனிது நடைபெற்றது.

பெரியார் ஈ. வெ. ரா., இரா. நெடுஞ்செழியன், ஆசிரியர் சுந்தரவடிவேல், சேலம் சித்தையன் ஆகியோர் மணமக்களைப்பாராட்டியும், சீர்திருத்த திருமணம் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அனைவருக்கும் நன்றிகூறினார்.

---

## அணைக்காடு திராவிடர் கழக திறப்புவிழா

14-4-46 பட்டுக்கோட்டைக் கடுத்த அணைக்காடு கிராமத்தில் திராவிடர் கழகத் திறப்புவிழாவும் செல்வம் நூல் நிலையத்திறப்புவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. தோழர் கே. எஸ். சிவாஜன் கொடியேற்றுவித்தார். தோழர் D. V. டேவிஸ் அனைவரையும் வரவேற்றார். தோழர்கள் ரங்கநாதன், ஜே. ஜெயராமன், இரா. சுப்ரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் எம். முகமதுமீரா சாயபு, திராவிடர் கழகத்தையும், தோழர் கே. அருணாசலம் செல்வம் நூல் நிலயத்தையும், தோழர் ஜார்ஜ் செல்வம் படத்தையும் திறந்து வைத்தார்கள். தோழர் டி. வி. டேவிஸ் நன்றி கூறினார்.

---


## மணமகள் தேவை

24 வயதுடையவரும் மாதம் ரூ. 150 வருமானம் உள்ளவருமான வாலிபர், மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறார். பெண் எந்த ஜாதியாய் இருந்தாலும், விதவையாய் இருந்தாலும் பரவாயில்லை. விவரங்களுக்கு, கூடுமானால் போட்டோவுடன் எழுதவும்.

Mr. G.
C/o C. S. Vasan,
7 A. Osborne Road,
Bangalore Cantt.

# குடி அரசு

1946-ளு ஏப்ரல்-மீ 20உ

## "பிரிட்டிஷ் வெளியேற தீர்மானித்து விட்டார்கள்"

காந்தியார், பிரிட்டிஷ் மந்திரி சபை தூதுகோஷ்டியைப்பற்றி "பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறத் தீர்மானித்து விட்டார்கள். பிரிட்டிஷ் தூதுகோஷ்டியாரும் வைசிராயும் இந்தியாவை விட்டு அமைதியாக வெளியேற ஏற்பாடு செய்யவே இங்கு வந்திருக்கிறார்கள், அவர்களின் நல்லெண்ணத்தில் எனக்குச் சந்தேகமில்லை இந்த சமயத்தில் நாம் பழைய மனஸ்தாபங்களை பாராட்டக்கூடாது. அவர்கள் செய்த பிழைகளுக்குப் பரிகாரம் தேடவே இங்கு வந்திருக்கிறார்கள். இனி அவர்களை நாம் பாராட்ட வேண்டுமே ஒழிய அவர்களது பழைய குற்றங்களுக்குஆக அவர்களை குறை கூறக்கூடாது, இடித்து முகத்திலடிக்கக் கூடாது" என்று ஏப்ரல் 13ல் டில்லியில்பொது மக்கள் முன்பு எடுத்துக் கூறியிருக்கிறார். அதோடு கூடவே,

"இனி எனக்கு அவர்களிடம் அவநம்பிக்கை இல்லை" என்றும் சொல்லி இருக்கிறார்.

எனவே அவ்வளவுதூரம் காங்கரசாருக்கு பிரிட்டிஷாரிடம் நல்லெண்ணமும் நம்பிக்கையும், பரிதாபமும் ஏற்பட்ட பிறகு இனி பிரிட்டிஷார் வெளியேறாதிருப்பார்களானால் வெளியேறாதிருப்பதற்கு காரணம் இந்த நாட்டில் உள்ள மக்கள் தகுதி இன்மையாகவோ இஷ்டப்படாததாகவோதான் இருக்கவேண்டுமே ஒழிய அதற்கு பிரிட்டிஷாரின் 'தந்திரமோ சூட்சியோ, நாணயமற்ற தன்மையோ' காரணம் என்று சொல்லுவது காந்தியாருக்கே நேர்மையாகாதென்றே சொல்லுவோம்.

பிரிட்டிஷார் "வெளியேறும்படியான" இந்த நிலையை ஏற்படுத்தின பெருமை காங்கரஸ்காரர்களே எடுத்துக்கொள்ளட்டும். அதற்குஆக நமக்குப் பொறாமை இல்லை. ஆனால் காங்கரஸ்காரர்கள் பிரிட்டிஷார்மீது இதுவரை சொல்லிவந்த குற்றச்சாட்டுகளுக்கு அதாவது பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேறாமல் இருப்பதற்குஆக மக்களைப் பிரித்துவைத்து நமக்குள்ளாகவே கலகத்தை மூட்டிவிட்டு காலம் கடத்தி சூட்சி செய்து வருகிறார்கள். அவர்கள் வெளியேறிவிட்டால் நமக்குள் எல்லாம் சரியாய்ப்போகும் என்று சொல்லிவந்த குற்றச்சாட்டுகள் என்ன ஆயிற்று என்று கேட்கிறோம். இன்று இந்த நாட்டை இந்தியர்களே ஆட்சிசெலுத்தத் தடைவேறு என்ன இருக்கிறது! பிரிட்டிஷாரை வெளியில் அனுப்பிக்கொடுப்பதில் யார் குறுக்கே நிற்கிறார்கள்? எதனால் அந்நியர்கள் "இந்தியாவில் சுயராஜ்ஜியத்தை யாரிடம் ஒப்புவிப்பது? அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் ஒருவருக்கொருவர் விரோத பாவம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்? என்றெல்லாம் சொல்லி வந்ததைப்பற்றி இவர்கள் ஏன் குறைகூறி வந்தார்கள்? இனி என்ன சொல்லுவார்கள் என்பதை கவனிப்போம்.

இது ஒருபுறமிருக்க காங்கரஸ்காரர்களில் மற்றொரு கூட்டத்தார் "கடைசி சொட்டு இரத்தம் சிந்தியாவது இந்தியாவை காப்பாற்ற வேண்டும்" என்றும் மக்களைப் "போருக்குத் தயாராயிருக்க வேண்டும்" என்றும் சொல்லி வருவதின் கருத்து என்ன என்றும் கேட்கிறோம்.

உண்மையைக் கூறவேண்டுமானால் இன்று பிரிட்டிஷ்காரனைத் தட்டிக்கொடுப்பதுபோல் இவர்கள் அவர்களைப் பாராட்டிப் பேசுவதெல்லாம் முன்பு பல தடவை நாம் குறிப்பிட்டபடி மறுபடியும் பிரிட்டிஷாருடன் ஒரு புதிய ஆரிய—ஆங்கிலேய ஒப்பந்தத்தை நல்ல பாதுகாப்புடன் செய்து கொள்ளுவதற்கு ஆகச்செய்யப்படுவதே தவிர இது உண்மையில் உள்ளத்தில் உள்ளதைப் பேசுவதாகக் கருதமுடியாது. காங்கரசுகாரர்கள் பிரிட்டிஷாரிடம் ஏதோ ஒருவித ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள் என்றே தெரிகிறது. அதனால்தான் பிரிட்டிஷாரும் காங்கரசைப் பெருமைப் படுத்தி காங்கரசுக்கு மரியாதை ஏற்பட்டு மக்கள் காங்கரசிடம் பயம் கொள்ளவேண்டிய அளவுக்கு இப்போது காங்கரஸ் சொல்வதுபோலெல்லாம் தாங்கள் நடப்பதாக நடித்துவருகிறார்கள்.

ஆகவே காங்கரசோடு தகுந்த ஒப்பந்தம் செய்துகொண்டு தங்கள் நலத்துக்கு பிரிட்டிஷார் தக்க பாதுகாப்போடு காங்கரசிடம் அதிகாரத்தை ஒப்புவிக்க இணங்கிவிட்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த ஒப்பந்த காரியம் உடனே வெளிப்படுத்த முடியாமல் இருப்பதற்கு இன்று உண்மையில் தகுந்த யோக்கியதையோடு எதிர்ப்பாயிருக்கிறவர்கள் முஸ்லீம்லீக்கு காரர்களே யாகும். அவர்கள் இல்லாதிருந்தால் சிறிது காலத்திற்கு முந்தியே இந்த பனியா-பிரிட்டிஷ், ஆரிய-ஆங்கிலேய ஒப்பந்தம் ஏற்பட்டு வெளியாகி இருக்கும், இந்த நாடும், இந்த இருவர் சுரண்டுதலுக்கும், இருவர் நல ஆட்சிக்கும் நிரந்தரமான இடமாக ஆகிஇருக்கும்.

ஆனால் திராவிடநாடு பிரிவினையும் பாக்கிஸ்தான் பிரிவினையும் வளம்பெற்ற பிரச்சினையாக ஆகிவிட்டதால் இப்போது பனியா—பிரிட்டிஷார் இந்தமாதிரி ஒருவரை ஒருவர் புகழ்ந்துகொண்டு பொது மக்களை ஏமாற்ற இவ்வளவு தந்திரம் செய்யவேண்டியதாக ஏற்பட்டு விட்டது.

உண்மையில் திராவிடநாடும் பாக்கிஸ்தானமும் இந்தியாவை விட்டு பிரிக்கப்பட்ட தனி நாடுகளாக ஏற்படாதவரை "பிரிட்டிஷார் வெளியேறி விட்டார்கள்" என்பதோ, "வெளியேறத் தயாராய் இருக்கிறார்கள்" என்பதோ வெறும் வேஷப் பேச்சாகுமே தவிர உண்மைப் பேச்சாக ஆகவே ஆகாது.

எனவே இந்த சந்தர்ப்பத்தில் தான் திராவிடமக்களும் முஸ்லிம் மக்களும் விழிப்புடன் இருந்து இந்த ஆரிய-ஆங்கில ஒப்பந்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதோடு எந்தக் காரியம் செய்தாவது அதை தடுத்தாக வேண்டியது இங்கு திராவிட மக்கள் கடமையாகும்.

—

## பெரியார் ஈ. வெ. ரா.

13-4-46 இரவு சென்னைக்குப் புறப்பட்டுச்சென்று சில முக்கிய காரியங்களைக் கவனித்துவிட்டு மாணவர் பயிற்சியை நடத்துவிக்க 15-4-46 ஈரோடு வந்தார். 19-4-46 காலையில் நடைபெற்ற செல்லம்—ராசு வாழ்க்கையொப்பந்தத்தில் கலந்துகொண்டு 10மணிக்கு புறப்பட்டு நாமக்கல் மாணவர் மாநாட்டிற்குச் சென்று அன்றிரவே ஈரோடு வந்தார். 22-4-46 திருச்சி நிர்வாகக் கமிட்டி கூட்டத்திற்கும், 23-4-46ல் கரூர் மருத்துவர் மாநாட்டிற்கும் செல்வார்.

## "தமிழ்முரசு" தோழர் சாரங்கபாணி

சிங்கப்பூர் "தமிழ் முரசு" ஆசிரியர் தோழர் சாரங்கபாணி அவர்கள் 18-4-46 இரவு ஈரோடு வந்து பெரியார் ஈ.வெ.ரா. அவர்களோடு பல முக்கிய விஷயங்களைப்பற்றி பேசிவிட்டு 19-4-46 இரவு திருவாரூருக்குச் சென்றார்கள். மறுபடி சென்னையில் இருவரும் சந்திப்பார்கள்.

## பெயர் சூட்டுவிழா

சேலம் ரொ. ச. அருணாசலம் குமாரர் ஆர். ராஜமாணிக்கம் அவர்களின் வாழ்க்கைத்துணைவி அனந்த லட்சமிக்கு பெண் குழந்தை பிறந்து 10-4-46 புதன்கிழமை காலை 11மணிக்கு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் பெயர் சூட்டும் வைபவம் நடந்தது. குழந்தைக்கு பெரியார் அவர்களால் நாகம்மாள் என்று பெயரிடப்பட்டது. அவ்விழாவிற்குவந்திருந்த எல்லா அன்பர்களுக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. இதை முன்னிட்டு குடி அரசுக்கு ரூபா 10ம், திராவிடநாடுக்கு ரூபா 10ம் நன்கொடை அளிக்கப்பட்டது.

## பிறப்பு

சென்னை ஜில்லா திராவிடர் கழக நிர்வாக உறுப்பினரும், மேற்குசென்னை திராவிடர் கழக துணைத் தலைவருமான தோழர் ஜே. எஸ். மணி அவர்களின் துணைவியார் முத்துநகர்வின் அம்மையாருக்கு 5-4-46 தேதியில் பிறந்த ஆண் மகவுக்கு இளங்கோவன் (மார்க்ஸ்) எனப் பெயர் சூட்டப்பட்டு, குடி அரசுக்கு ரூபா இரண்டு நன்கொடையளிக்கப்பட்டது.

o o

வடசென்னை இராயபுரம் நமதியக்கத் தோழர் பி. எ. கே. பழனிசாமி அவர்கள் வாழ்க்கைத் துணைவியர் தோழியர் தில்லை சிவகாமு அவர்களுக்கு 1-4-46ல் ஆண் குழந்தை பிறந்து, தாயும் சேயும் சுகம். சேய்க்கு பிரான்ஸ்நாட்டு விடுதலைவீரன் ருஸோ அவர்களின் பெயரிடப்பட்டிருக்கிறது. குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

## திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் அழைப்பு

★

ஐயா,

22-4-46 திங்கட்கிழமை காலை 10-மணிக்கு திருச்சியில் திராவிடர்கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக்கழக அங்கத்தினர்கள்கூட்டம் நடைபெறும். அதுசமயம் சில முக்கிய விஷயங்கள் பற்றியும், "விடுதலை" பத்திரிகை சம்பந்தமாகவும் ஆலோசிக்கப் படுமாதலால் தாங்கள் அவசியம் வர வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன்.

திருச்சி
13-4-46

T. P. வேதாசலம்,
தலைவர்.

## தென் ஆற்காடு மாவட்ட கருப்புச்சட்டை மாநாடு

6-4-46 சனிக்கிழமை குறிஞ்சிப்பாடியில் தெ. ஆ. மாவட்ட கருஞ்சட்டைப் படை 1வது மாநாடு நடைபெற்றது. காலை 8½மணி வண்டியில் பெரியார் அவர்களும் மணியம்மை முதலிய பலரும் வந்தனர், புகைவண்டி நிலையத்தில் சுமார் 1500க்கு மேற்பட்ட கருஞ்சட்டை வீரர்கள் அணிவகுத்து நின்றனர். வண்டிவந்து நின்றதும் பெரியார் வாழ்க என்ற பெரு முழக்கத்துடன் தோழர்கள் குறிஞ்சிப்பாடி சேர்மன் பி. பி. முத்தையா, இரா. சரவணன், கே. டி. பி. பழனியப்பன் ஆகியோர் பெரியார் அவர்களுக்கு மாலை சூட்டி வரவேற்று காரில் அமரவைத்து மாபெரும் ஊர்வலமாக இயக்க முழக்கத்துடன் அழைத்துச் சென்றனர். வழியில் பல அன்பர்கள் பெரியார் அவர்களுக்கு மாலை சூட்டினர். பெரியார் அவர்கள் முதன் முதலாக இங்கு வருவதால் பெரியார் பொன்மொழி கேட்கவும், பார்க்கவும் பல கிராமங்களிலிருந்து பெருந்திரளாக சுமார் 6000 பேருக்குமேல் வந்துவிட்டனர். ஊர்வலம் "தாலமுத்து நடராசன்" பந்தலை அடைந்தது. செபாமன் இசையுடன் மாநாடு ஆரம்பிக்கப்பட்டது மதியழகன் அவர்கள் கொடியேற்றுவித்தார். கே. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ச) மாநாட்டை திறந்துவைத்தார்; வரவேற்புக் குழு தலைவர் இரா. சரவணன் வரவேற்புரை நிகழ்த்தி எல்லோரையும் வரவேற்றார். இரெ. இளம்வழுதி பெரியார் அவர்களைத் தலைமைதாங்க முன்மொழிய பலர் வழிமொழிய பெருத்த கைதட்டலுக்கிடையே எழுந்து 2½மணி நேரம் பேசினார். பின்பு கருப்புச்சட்டைப்படையின் அவசியத்தைப்பற்றி எ. பி. சனார்த்தனம் எம். ஏ., அவர்கள் பேசினார்கள். பிற்பகல் உணவிற்காக மாநாடு கலைந்தது. பெரியார் அவர்களுக்கும் மற்றுமுள்ள சில தோழர்களுக்கும் சேர்மன் பி. முத்தையா அவர்கள் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டது. பிற்பகல் மீண்டும் மாநாடு கூடியது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திராவிடநாட்டுப் படத்தை இரெ. இளம்வழுதி திறந்துவைத்தார். செல்வம் படத்தை எ. பி. சனார்த்தனம் திறந்து வைத்தார். பெரியார் அவர்கள் நீண்ட நேரம் பேசிவிட்டு மாலை 6½ மணி வண்டியில் சென்னைக்கு சென்றார். தோழர் முனுசாமி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்பழகன், விழுப்புரம் அப்துல் வகாப், வீரமணி ஆகியோர் பேசினார்கள். அதன் பின்பு இரவு 11மணிக்கு புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் சேரன் செங்குட்டுவன் நாடகம் துவக்கப்பட்டது. நாடகத்திற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து சுமார் 10000 மக்கள் வந்திருந்தனர். இடைஇடையே கே. டி. பி. பழனியப்பன், இரெ. இளம்வழுதி நடித்த தென்னாலி இராமன் நகைச்சுவை கதையும் நடிக்கப்பட்டது. தலைவர் மாணிக்கம் அவர்கள் முடிவுரையில் குறிஞ்சிப்பாடி அண்ணாதுரை நடிகர் கழகத்தாரை பாராட்டிப் பேசினார்கள்.

வரவேற்பு குழு தலைவர் தோழர் சரவணன் அவர்கள் மகன் திராவிடமணி (5 வயது) பெரியார் அவர்கட்கு 301 காலணாக்கள் கொண்ட பணமுடிப்பு அளித்து மாலை சூட்டினார்.

### தீர்மானங்கள்

சமுதாய சம்பந்தமாக மதம், சாதி, சட்டம் இவைகளின் பேரால்

## கழகம் அமைத்தார்கள்

6-4-46ல் திருவண்ணாமலை கம்மவார் மடத்தின் மேல்மாடியில் நடைபெற்ற திராவிடர் கழகத் தேர்தல் கூட்டத்தில் திருவண்ணாமலை டிவிஷன் திராவிடர் கழகத்திற்கு நிர்வாகக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டு தோழர் ஆ. மு. பாலகிருஷ்ணன் தலைவராகவும், என். முருகையா செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

10-4-46ல் கணியூர் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்று தோழர்கள் ம. சுப்பையா தலைவராகவும், எ. எஸ். துரைசாமி செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

14-4-46ல் வடார்க்காடு ஜாகீர் அதி

---

திராவிடருக்கு இருந்துவரும் பேதங்கள் யாவும் ஒழிக்கப்படவேண்டும் என்றும், அவற்றுள் காப்பிக்கடை, ஹோட்டல் முதலியவைகளில் இருந்துவரும் இழிவும் பேதமும் ஒழிக்கப்படுவதை முதல் போராட்டமாகக் கொள்ளவேண்டுமென்றும், அப்போராட்டத்திற்கு கறுப்புச் சட்டைப்படையை சர்வாதிகாரத்துடன் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமாயும் தலைவர் பெரியார் அவர்களை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது என்ற தீர்மானமும்,

பல்கலைக் கழகங்களில் திராவிடர்களின் தனிக்கலை, இலக்கியம் முதலியனபற்றித் தனித்துறைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், கைத்தறி நெசவுத் தொழிலாளருக்குப் போதிய நூல் சப்ளைசெய்ய வேண்டுமென்றும், குடிஞ்சிப்பாடி போர்டு எலிமெண்டரி பாடசாலையை உயர்நிலைப்பள்ளியாக்க வேண்டுமெனக்கோரியும், தபால் தந்தி வசதியை அதிகப்படுத்தும்படி கோரியும், ரோடு, விளக்கு முதலிய வசதிகளை அதிகப்படுத்தும்படி பஞ்சாயத்துபோர்டைக் கோரியும் தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

---

## "திராவிடமணி"

இரவல்—கூலி அச்சுக்கூட கஷ்டம் காரணமாக "திராவிடமணி" பத்திரிகை ஒழுங்காய் வெளிவருவது தடைப்பட்டு இப்பொழுது புதுச்சாமான்கள் சொந்தத்தில் வாங்கப்பட்டுள்ளன. சர்க்கார் உத்திரவு வர தாமதமானதால் இன்னும் இரண்டொரு வாரங்களுக்கு வாசகர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

டி. எம். முத்து, ஆசிரியர்.

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 20-4-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 41,184

இம்மாதம் 20 உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 6841 | 7. இராமநாதபுரம் | 2608 |
| 2. சேலம் | 6833 | 8. சென்னை இவ்வாண்டில் 663 | 2533 |
| 3. கோவை | 6114 | 9. தென் ஆற்காடு | 2231 |
| 4. திருச்சி | 4769 | 10. மதுரை | 1616 |
| 5. திருநெல்வேலி | 3423 | 11. செங்கல்பட்டு | 950 |
| 6. வட ஆற்காடு | 2647 | 12. மற்ற இடங்களில் | 619 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு

---

பெரமனூர் கிராமத்தில் தோழர் ஆர். வெங்கட்ராமன் அவர்களால் திராவிடர் கழகம் நிறுவப்பட்டு தோழர் தி. பொ. கோவிந்தசாமி தலைவராகவும், சி. பங்காரு, முனிராசு செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. அன்று மாலை தோழர் தி. லா. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

o o

14-4-46ல் குடந்தை அரசலார் ரோட்டில் தோழர் எஸ். ஆர். சாமி அவர்கள் தலைமையில் சுயமரியாதைக் கழகம் தொடங்கப்பெற்று தோழர் எஸ். நடராசன் அவர்களைத் தலைவராகக்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

சிறுகனூர் திராவிடர் கிளைக் கழகத்திற்கு தோழர் ரா. ரங்கசாமி தலைவராகவும், தோழர்கள் எஸ். முத்து வெங்கடாசலம், எஸ். எஸ். மணியன் ஆகியோர் செயலாளர்களாகவும் 1946ம் ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

13-4-46ல் பரண்டமங்கலம் செந்தமிழ் நிலையத்திற்கு தோழர் இரா. பாலகுருசாமி தலைவராகவும், கந்தசாமி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர், குடி அரசுக்கு ரூபா 1. நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

15-4-46ல் நடைபெற்ற ஈரோடு திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் 1946ம் ஆண்டிற்கு தோழர் ஈ. பழனியப்பா தலைவராகவும், R. D. எல்லநாயகம் துணைத் தலைவராகவும், தோழர் ஆர். ஊர்துசாமி செயலாளராகவும், ராம விலாஸ் ஜவுளிக்கடை ஆர். பாலசுப்ரமணியம் பொருளாளராகவும் மற்றும் 7-பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

7-4-46ல் மாயவரம் கூறைநாடு 5ம் எண் புதுத்தெருவில் தோழர் கே. கோவிந்தராசலு அவர்கள் தலைமையில் திராவிடர் கழகக்கிளை அமைக்கப்பட்டு இயக்கத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

o o

14-4-46ல் பட்டுக்கோட்டை தாலுக்கா அணைக்காடு கிராமத்தில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு தோழர் D. V. டேவீஸ் தலைவராகவும், எஸ். அருணாசலம் செயலாளராகவும் கொண்ட செயற்குழு நிறுவப்பட்டது.

o o

5-4-46ல் பட்டுக்கோட்டை திராவிடர் கழகத் தலைவர் சி. என். விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில் செயலாளர் D. ஆத்மாராமன் இராஜிநாமா ஒப்புக் கொள்ளப்பட்டு தோழர் கே. மாணிக்கம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

o o

14-4-46ல் கடம்பூரில் தோழர் வே. மு. மாரியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் திராவிடர் கழகத்தை திறந்துவைத்தார். கழகத்திற்கு தோழர் வே. மு. மாரியப்பன் தலைவராகவும், மு. சி. பொன்னுசாமி செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. இரவு தோழர் பி. எஸ். தங்கவேல் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் பி. எஸ். சண்முகம் நன்றி கூறினார்.

---

ரோஜா முத்தையா

# இயக்கச் செய்திகள்

26-3-46ல் செங்கல்பட்டு ரெட்ஹில்ஸ் பஸ் ஸ்டாண்டு மைதானத்தில் தோழர் பி. செல்வராச தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எ. பி. சனார்த்தனம், என். வி. நடராசன் சொற்பொழிவாற்றினர்.

31-3-46ல் சென்னை மாடவாக்கம் மைதானத்தில் தோழர் என். எஸ். தங்கரூபன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் தங்கராச, கே. கோவிந்தசாமி, பி. சகந்நாதன், செம்பியன், புரட்சிவீரன், முனுசாமி, ஜி. சாமி முதலியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் பழனிச்சாமி நன்றி கூறினார்.

3-4-46ல் சென்னை அமைந்தகரை திராவிடர் கழகக் காரியக்கமிட்டி கூட்டம் நடைபெற்று, ஜூன் மாதத்தில் லட்சுமி தியேட்டரில் திராவிட மாநாடு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

3-4-46ல் சோபனபுரம் தமிழர் வாசகசாலை ஆண்டுவிழா துறையூர் வழக்கறிஞர் தோழர் ரங்கசாமி தலைமையில் நடைபெற்று தோழர்கள் பெரியசாமி, மாணிக்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் தணிகாசலம் நன்றி கூறினார்.

2-4-46ல் கள்ளிகுளத்தில் தோழர் எம். சங்கரநாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் அ. சேக், டி. கோவிந்தராச ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

31-3-46ல் புல்லம்பாடியில் தோழர் டி. எ. கண்ணப்பன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்ற தோழர்கள் சிங்காரவர், சாமிமுத்து, சவுரிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

சிறுத்தொண்டநல்லூர் திராவிடர் கழகச் சார்பில் ஏரலில் 2-4-46ல் தோழர் இரா. பாலராச தலைமையிலும், 3-4-46ல் மொன்னாமுகம்மது தலைமையிலும் நடந்த கூட்டங்களில் தோழர்கள் மனோகரன், மதியழகன், மீனாட்சிசுந்தரம், சிவசங்கு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

2-4-46ல் குடந்தையில் தஞ்சை மாவட்ட மாநாட்டின் வரவேற்புக்குழு அமைப்புக்கூட்டம் தோழர் பி. ஆர். பொன்னுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடர் மாநாட்டிற்கு தோழர்கள் வி. சின்னதம்பி, வி. இலட்சுமிபதி முறையே வரவேற்பு தலைவர் செயலாளராகவும், சுயமரியாதை மாநாட்டிற்கு தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். ஆர். சாமி முறையே வ. வே. தலைவர், செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

6-4-46ல் சாக்கோட்டையில் சுயமரியாதை சமதர்ம சங்கக்கூட்டம் நடைபெற்று 28-4-46ல் ஆண்டுவிழா நடத்தவும், தோழர்கள் புதுக்கோட்டை கோவிந்தராசன் பி. ஏ. பி. எல். முதலிய பலரை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

4-4-46ல் திருச்சி தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் தோழர் எம். நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருச்சி மாவட்ட திராவிடர் கழக நிர்வாக கமிட்டிக் கூட்டத்தில் மாநாட்டு வரவுசெலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு இருப்பு ரூபா 120 ஜில்லா கழக நிதியில் சேர்க்கப்பட்டது.

5-4-46ல் மாயவரம் திராவிட மாணவர் கழகக்கூட்டம் நடைபெற்று ஜூன் மாதத்தில் தென்மண்டல திராவிட மாணவர் 2-வது மாநாடு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

24-3-46ல் திருச்செங்கோடு கோயில் மண்டபத்திற்கெதிரில் தோழர் கே. பரமசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் "திராவிடர் நிலை" என்பதுபற்றி அரிய சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் ஆ. திராவிடமணி, எ. சித்தையன் ஆகியோரும் பேசினர். தோழர் கே. பெருமாள் நன்றி கூறினார்.

29-3-46ல் வாலுடி தாலுக்கா மானம்பாடியில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் வீரமுத்து, நல்லதம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

31-3-46ல் திருச்சி மலைக்கோட்டை திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்று அங்கத்தினர் சேர்த்தல், பொதுக்கூட்டம் ஒன்று நடத்தல் ஆகியவைபற்றி முடிவு செய்யப்பட்டது.

31-3-46ல் வடாற்காடு வேலூரில் சென்னை திராவிடர் கழகச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் கே. அன்பழகன் "திராவிடர் நிலை" என்பதுபற்றி அரிய சொற்பொழிவாற்றினார். தோழர் திருநாவுக்கரசு நன்றிகூறினார்.

17-2-46ல் நடந்த திருவாரூர் திராவிட மாணவர் கழக மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா வரவு ரூ. 213-7-0, செலவு ரூ. 206-0-0, இருப்பு ரூ. 7-7-0 என செயலாளர் தே. வேங்கடாசலம் அறிவிக்கிறார்.

10-2-46ல் மைலை திராவிடர் கழக ஆதரவில் நடைபெற்ற முதல் மாநாட்டிற்கு நன்கொடை, டிக்கட் மூலமாக வரவு ரூ. 550-6-0, மொத்த செலவு ரூ. 437-0-9, இருப்பு ரூ. 113-5-3 எனப் பொருளாளர் ம. க. கிருஷ்ணமூர்த்தி அறிவிக்கிறார்.

10-3-46 கடலூர் வாக்கால்பட்டில் போர்டு பள்ளிக்கூடத்திற்கெதிரில் தோழர் காஞ்சி கலியாணம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக கூட்டத்தில் தோழர்கள் இளவழகன், வீரமணி, இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

17-3-46ல் பண்ணுருட்டி திண்டுக்கல் பாங்கின் அருகில் புதுப்பேட்டை தோழர் வைத்திபலிங்கம் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். கே. சாமி, நா. இராசவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். காங்கரஸ் அன்பர்கள் அதே இடத்தில், அதே நேரத்தில் தங்கள் கூட்டம் ஒன்றை அமைத்துக் கலவரம் செய்ய முயற்சித்தும் தங்கள் முயற்சி தோல்வியுற்று வீடுசென்றனர்.

19-3-46ல் மதுரை பொன்னகரம் மீனாட்சி தோப்பு திராவிடர் கழகச் சார்பில் தோழர் சு. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் அரிகிருஷ்ணன், சாமிநாதன், துரை, பெரியசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஆர். எஸ். சங்கரநாராயணன் நன்றி கூறினார்.

17-2-46ல் தோழர் முத்துத்தம்பால் அவர்கள் குடந்தைசெட்டிப் புதுத்தெரு அண்ணாதுரை படிப்பகத்தை திறந்து வைத்தார். மேற்படியார் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஈ. மு. மாணிக்கம், வி. அ. அரங்கசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஜெ. ம. சக்ரபாணி நன்றி கூறினார்.

17-3-46ல் சலகண்டபுரம் செட்டியார் சாவடிமுன் தோழர் பெ. சின்னமாரிமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் மா. நடராசன், கா. அ. சித்தப்பன், க. நெடுஞ்செழியன், கண்ணன், வீரபாலன் ஆகியோர் சொற்

பொழிவாற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

24-3-46ல் குணியமுத்தூர் திராவிடர் கழகச்சார்பில் எஸ். எம். மாரியன் தலைமையில் நடைபெற்ற திராவிட கழகக் கூட்டத்தில் தோழர்கள் கெ. ராமு, எம். கருப்பண்ணன், ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஆண்டுவிழா நடத்தவும், இரவு பாடசாலை நடத்தவும் முடிவு செய்தனர்.

o o

24-3-46ல் ஓட்டேரி டக்ஸ்ரோடு 41வது இல்லத்தில் மேற்குசென்னை திராவிடர் கழக நிர்வாக கமிட்டிக்கூட்டம் நடைபெற்று கழக வரவுசெலவு முதலிய அலுவல்கள் கவனிக்கப்பட்டன.

o o

30-3-46ல் சிவகங்கை திராவிடர் கழக சார்பில் தோழர் சத்தியேந்திரன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ஈ. வி. கே. சம்பத் மாணவர் கடமை என்பதைப்பற்றி பேசினார்.

o o

31-3-46ல் திருவில்லிப்புத்தூரில் நடந்த கூட்டத்தில் ராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழக மாநாட்டை நடத்துவதற்காகவேண்டி வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது. ஷை ஊரில் தோழர் ஆதி நாராயணன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

o o

13-3-46ல் ஆனைமலையில் தோழர் எ. ஆர். கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற திராவிடர்கழகக் கூட்டத்தில் தோழர்கள் எ. வி. மயில்சாமி என். இ. பாலகுரு ஆகியோர் பேசினார்கள்.

• •

17-3-46ல் கோபியில் தோழர் சேரமான் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் என். இ. பாலகுரு, ஆ. திராவிடமணி பி. ஏ., ஆகியோர் திராவிடநாட்டின் தற்கால அரசியல் நிலை என்பதுபற்றி பேசினார்கள்.

o o

24-3-46ல் சிவகாசியில் சாத்தூர் தாலுக்கா திராவிடர் கழக நிர்வாகக்கூட்டம் தோழர் தங்கையா ஆகியோர் தலைமையில் நடைபெற்று இயக்க அமைப்பு திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

• •

27-3-46ல் சாத்தூர் தாலுக்கா இருக்கன்குடியில் தோழர் சப்பையா தலைமையில் கருப்புச்சட்டைப்படை, திராவிடர் கழகம் புலவர் எஸ். கே. அன்னக்கிளியால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. தோழர் பி. இராசமணி இயக்கக்கொடி ஏற்றுவித்தார். தோழர்கள் சா. இராமசாமி, பி. கருப்பையா, மைக்கேல்ராயர், கே. முத்தையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

15-2-46ல் இராசிபுரம் பகுத்தறிவு கழகச் சார்பில் தோழர் இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர்களும் எதிர்காலமும் என்பதைப்பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

o o

22-2-46ல் கூடலூர் O. T. செட்டி கோயிலுக்கெதிரில் தோழர் பி. வி. நித்தியானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சிங்காரவேலு அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. தோழர்கள் சி. இளவழகன், என். சிவாத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

23-2-46ல் கூடலூர் O. T. அக்கரை சிங்கார தோப்பில் தோழர் பி. வி. நித்தியானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றகூட்டத்தில் தோழர் என். சிவாத்தினம் அவர்கள் "மீன்பிடிப்போர் சமூகமும், படகுத்தொழிலாளர் கடமையும்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்.

• •

8-3-46ல் புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழக ஆதரவில் தோழர் செய கோவிந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சிங்காரவேலு அவர்கள் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. தோழர்கள் இராம கலியாணசுந்தரம், ரெங்கராசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

24-2-46ல் கள்ளிகுளத்தில் தோழர் தாவீது அவர்கள் தலைமையில் நடைபெற்ற தொண்டர்படை கூட்டத்தில் தோழர்கள் எஸ். வி. டேவீஸ், சேக் முகம்மது ஆகியோர் சொற்பொழிவாற்றினர்; பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

21-2-46ல் சண்பக ராயநல்லூர் சனிச்சந்தையில் திருத்துறைப்பூண்டி தோழர் ஹாஜசபீர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் அரங்கண்ணல், பாவலர் பாலசுந்தரம் காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் வி. சுப்பையன் நன்றி கூறினார்,

o o

மேட்டுப்பாளையத்தில் தோழர் இருதயசாமி தலைமையில் 26-1-46ல் தமிழ்த் திருநாள் கொண்டாடப்பட்டு தமிழாசிரியர் ந. சண்முகதேசிகர், சண்முகம், பாலசுப்ரமணியம், ராமன், பழனியாண்டி ஆகியோர் பேசினர்.

• •

ஜூர் செந்தமிழ் அறிவு நூல் நிலைய திறப்புவிழா 2-2-46ல் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்று தோழர் எஸ். ஏ. நாச்சிமுத்து ஆரம்பித்து வைத்தார். தோழர் எஸ். என். அருணாசலம் சொற்பொழிவாற்றினார்.

o o

குள்ளம்பட்டி கிராமத்தில் 1-2-46ல் சுயமரியாதை சங்கம் தோழர் ப. இராமலிங்கத்தால் திறந்துவைக்கப்பட்டு தோழர்கள் க. பெ. முத்து, ப. காசிலிங்கம் முதலியோர் பேசினர். சங்கத் தலைவராக தோழர் காசிலிங்கம், செயலாளராக கந்தசாமி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

ராசிபுரம் சைனீக பகுத்தறிவு வாலிபர் சங்க சார்பில் 3-2-46ல் தோழர் பி. வேல்சாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் வி. பழனிசாமி, ராமசாமி, கிருஷ்ணசாமி, நாராயணசாமி ஆகியோர் பேசினார்கள்.

o o

மதுரை தெற்குவாசல் திராவிட இளைஞர் கழகத்தில் தோழர் குருசாமி தலைமையில் 3-2-46ல் நடந்த கூட்டத்தில் பம்பாய் சோக்காஜி என்ற ஆதி திராவிடரை ஓட் அளிக்காததற்காக காங்கரஸ்காரர் கொலை செய்ததை கண்டித்துத் தீர்மானம் நிறைவேறியது.

o o

7-4-46ல் பாமணியில் நடைபெற்ற திருத்துறைபூண்டி தாலுக்கா திராவிடர் கழகக் கூட்டத்தில் மேற்படி தாலுக்கா மாநாட்டை நடத்துவதற்கு தோழர்கள் அப்துல்காதர் தலைவராகவும், பாமணி மாணிக்கம், முத்துப்பேட்டை சாமிநாதன் செயலாளராகவும் கொண்ட வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

o o

இலைக்கூரில் கைவல்யம் படிப்பகம் தோழர்கள் கோ. சுப்பையன் பண்ணையக்காரர் முயற்சியால் திறந்துவைக்கப்பட்டு குடி அரசு வால்யூம்களும், வேறு இயக்கப் புத்தகங்களும் வைக்கப்பட்டுள்ளன. தோழர்கள் சென்று படித்துப் பயன்பெறுக.

• •

10-4-46ல் வலையபட்டியில் தோழர் கே. ஓ. எல். சுப்புசாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பல தோழர்கள் சீர்திருத்தப்பாக்கள் பாடியபின் தோழர் வீரராசன் சொற்பொழிவாற்றினார்.

o o

7-4-46ல் தூத்துக்குடி அண்ணாதுரை திராவிடர் கழக சார்பில் தோழர் சுசதாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

---

Edited, Printed, and Published by [illegible] Press 42, Cutchery street, ERODE.